## தேசிய பாதுகாப்பு நிதியம் - 2016

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மீதான என்னுடைய அறிக்கை கீழ்வரும் பந்தியின் கீழ் உள்ளடக்கப்பட்டது. இணைப்பு 01 ஆக வருமான செலவினக்கூற்று காட்டப்பட்டதுடன் இணைப்பு 02 ஆக பண முதலீடுகளின் கூற்று காட்டப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகளிற்கான குறிப்புக்கள் விரிவான முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07

நிதியத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2008 இல் முறையே ரூபா 11,030,000 மற்றும் ரூபா 4,520,000 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய சொத்துக்கள் 2016 திசெம்பர் 31 வரையும் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீடுகளின் பெறுமதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் ரூபா 918,384,284 இல் காட்டப்பட்டிருந்த போதிலும், தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புக்கள் புதுப்பித்தல் அறிக்கையின் பிரகாரம், நேரொத்த முதலீடுகளின் பெறுமதி ரூபா 918,114,310 ஆகும். ஆதலால், வித்தியாசம் ரூபா 269,974 அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ரூபா 65,662,079 தொகையாக முதலீடுகள் மீதான வட்டி வருமானத்தின் விரிவான பட்டியல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிலையான வைப்புச் சான்றிதழ்களின் பிரகாரம், முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 62,665,692 ஆகும். ஆதலால், ரூபா 2,996,387 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 66,662,514 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நேரொத்த மிகைகள் ரூபா 48,440,571 ஆகும், ஆதலால் மீளாய்வாண்டின் போது ரூபா 18,221,943 ஆல் நிதிவிளைவுகளில் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முலீடுகள் மீதான வட்டி ரூபா 11,491,428 ஆல் அதிகரித்திருந்ததுடன் நலன்புரி செலவினம் ரூபா 6,186,354 ஆல் குறைவடைந்தமையால் நிதிவிளைவுகளின் அதிகரிப்புக்கு பிரதான பங்களித்திருந்தது.

முன்னைய 04 ஆண்டுகளுடன் மீளாய்வாண்டிற்காக நிதி விளைவுகள் மீதான பகுப்பாய்வு 2012 இல் ரூபா 57,510,513 தொகையான மிகைகள் 2013 இல் ரூபா 80,680,937 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த முன்னேற்றம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2015 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 48,440,571 வரை குறைவடைந்ததிருந்நது. நிதிவிளைவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 66,662,514 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளில் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு சீராக்கலின் பின்னர் நிதியத்தின் பங்களிப்பு 2012 இல் ரூபா 57,714,991 ஆனதுடன் 2013 இல் ரூபா 80,884,212 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்த பங்களிப்பு 2014 மற்றும் 2015 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2015 இல் பங்களிப்பு ரூபா 48,625,395 ஆனதுடன் இது மீளாய்வாண்டின் போது ரூபா 66,836,447 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம், மேவுகைச் சபையின் கவனத்திற்குகெடுத்து தேசிய பாதுகாப்பு மற்றும் தரைப்படை மற்றும் இராணுவ படை உறுப்பிர்களிற்கு கடமையின் போது காயமடைத்தல் அல்லது இறத்தல் அல்லது அத்தகைய உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்கள் என்போருக்கு நிதி உதவி வழங்குதல் உள்ளடங்கலாக மேன்மை தங்கிய ஜனாதிபதியின் நெறிப்படுத்தல்களை தரமுயர்த்தி உறுதிப்படுத்துவதற்கு நிதியத்தின் நிதியத்திற் மேவுகை சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சகல 03 படையணிகளின் செயற்பாட்டில் 25,273 உறுப்பினர்கள் இறந்து அல்லது காணாமல் போயுள்ளதுடன் 18,942 உறுப்பினர்கள் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், 05 ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்காக சேமிப்பு வைப்புக்கள் வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் போர் வீரர்களிற்கு சேமிப்பு வைப்புக்களில் வட்டி வருமானத்தை வழங்குதல் மாத்திரம் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 05 ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்காக நிதி ஆதரவு வழங்குவதற்கான திட்டம் மீளாய்வாண்டின் போது தொடரப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகை அடிப்படையில் இலங்கை இராணுவத்தினாரல் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நிதியத்திற்கு சொந்தமான 03 வீடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,921,500 தொகையான வாடகை வருமானம் நிலுவையாக இருந்தது. அதில் ரூபா 721,500 ஆன தொகை 2 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவைகளை அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விடயம் வழங்கப்பட்ட முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் இலங்கை இராணுவத்தினருடன் வாடகை உடன்படிக்கைகள் கைசாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இல் தேசிய பாதுகாப்பு நிதியத்தால் பெறப்பட்ட பிரமிட் வடிவ கண்ணாடியொன்றில் வீடுடைய நுழைவாயிலில் இரத்தினக்கல் பதிக்கப்பட்ட எண்ணிக்கை பொறிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் இயற்கையாவென மதிப்பிடுவதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிக் உறுப்பினர்களை கொண்ட அளவீட்டு சபையால் ரூபா 2,890,415 இல் மதிப்பிடப்பட்டிருந்தது. நிதியத்தின் செயலாளரால் அளிக்கப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், நுழைவாயிலின் உள்ளபடியான பெறுமதியை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்படும் நடைமுறையை தெரிவுசெய்வதில் பல கஸ்ரங்களற்கு முகம்கொடுத்தமையால் அத்தகைய மதிப்பீட்டு அறிக்கை வழங்கவேண்டியிருந்தது.

(இ) நிதியத்தின் மேவுகைச் சபையின் கூட்டம் அது தொடங்கியதிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரையும் நடைபெற்றிருக்கவில்லை. 1991 இன் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டிருந்த 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பிரிவை திருத்துதல் மற்றும் சபையின் உறுப்பினர்களை வரவழைப்பதற்கான கஸ்ரங்களை கருத்திற்கொண்டு சபையின் கலவை மாற்றம் என்பவற்றிற்கு 2016 ஆகஸ்ட் 16 இல் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரையும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை பூர்த்திசெய்திருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களானது நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 09 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1991 இன் 10 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதி அமைச்சு செயலாளரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் மற்றும் நிதியத்தின் வேறு இரண்டு உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2006 திசெம்பர் 22 இன் பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ) ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பாதீடு இல்லாமல் உரிய நிதியாண்டில் எவ்வித செலவினமும் செய்ய முடியாது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் பாதீடு தயரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அமைவதற்கு இயலக்கூடியவாறான நடவடிக்கைகள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 உள்ளக கணக்காய்வு**

பாதுகாப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம், அமைச்சின் ஏற்பாடுகளின் கீழான நிதியத்தின் சகல நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதிப் பிரமாணம் 134(3) இல் வேண்டப்பட்டவாறு அவற்றின் மீது வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5. முறைமைகளும் கட்டுப்பாடு:களும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | முதலீட்டின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. முதலீடுகள் மீதான வட்டி வருமானத்திற்கான விபரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) செயற்பாட்டு முகாமைத்துவம் | வாடகை உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருக்கவில்லை, நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை, மேவுகை சபையின் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**இணைப்பு 01**

**2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பாதுகாப்பு நிதியத்தின் வருமானச் செலவினக் கூற்று**

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | |
| நன்கொடைகள் | 2,520 | 5,950 |
| முதலீட்டு வட்டி | 65,662,079 | 54,170,651 |
| வாடகை வருமானம் | 1,200,000 | 666,000 |
| | 66,864,599 | 54,842,601 |
| **செலவினம்** | | |
| உத்தியோகத்தரின் படிகள் | 17,400 | 20,400 |
| நலன்புரிச் செலவினம் | 28,152 | 6,214,506 |
| நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு | 156,533 | 164,424 |
| வங்கிக் கட்டணங்கள் | - | 2,700 |
| | 202,085 | 6,402,030 |
| செலவினத்திற்கு மேலான வருமானம் | **66,662,514** | **48,440,571** |

**இணைப்பு 02**

**2016 ஆம் ஆண்டில் தேசிய பாதுகாப்பு நிதியத்தின் பண முதலீடுகளின் கூற்று**

| கணக்கு இலக்கம் | முதலீட்டு நிறுவனம் | முதலீட்டு வகை | முதலீட்டு திகதி | காலம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டு | ரூபா |
| 2 0065 11 75912 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூன் 30 | 1 | 12,327,034 |
| 2 0065 11 75939 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூன் 30 | 1 | 15,861,117 |
| 2 0065 11 75823 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூலை 07 | 1 | 139,948,273 |
| 2 0065 11 78202 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 செப்தெம்பர் 25 | 1 | 246,329 |
| 2 0065 11 78148 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 செப்தெம்பர் 25 | 1 | 122,728,616 |
| 2 0065 11 86302 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூலை 22 | 1 | 1,009,782 |
| 2 0065 11 95603 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 ஏப்ரல் 09 | 1 | 12,236,260 |
| 2 0065 11 73189 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 மார்ச் 24 | 1 | 84,222,845 |
| 2 0065 11 75807 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூன் 27 | 1 | 104,715,785 |
| 2 0065 11 75815 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 யூன் 27 | 1 | 119,174,180 |
| 2 0065 11 83940 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 ஏப்ரல் 29 | 1 | 60,662,295 |
| 2 0001 2248549 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 சனவரி 07 | 1 | 1,400,000 |
| 2 0001 22 29927 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 ஆகஸ்ட் 28 | 1 | 149,807,802 |
| 2 00651025058 | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 2016 மார்ச் 31 | 1 | 400,000 |
| LKA36417G140 | தேசிய சேமிப்பு வங்கி | திறைசேரி உண்டியல் | 2016 யூலை 15 | 1 | 93,643,967 |
| | | | | | **918,384,285** |